பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 30 புதன்கிழமை (17.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 321

## வடமராட்சியில் கப்பம் கறந்த மூவர் மன்னாரிலும் இங்கும் கைது!

### வங்கியிலிட்ட ரூ. 25 லட்சம் முடக்கம்!! பருத்தித்துறை நீதிமன்றம் நடவடிக்கை

- உதயன் உடுப்பிட்டி செய்தியாளர் -

உடுப்பிட்டி ஒக்ரோபர் 17

வடமராட்சிப் பிரதேசத்தில் பொதுமக்களை தொலைபேசி மூலம் மிரட்டிக் கப்பம் கறந்தமை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமை ஆகிய மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டவார்கள் என்று கூறப்படும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயரில் வங்கியிலிடப்பட்டிருந்த 25 லட்சம் ரூபாவை முடக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் நேற்று உத்தரவிட்டார்.

மன்னாரில் இருவரும், வடமராட்சியில் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். மன்னாரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண்.

இவர்கள் மக்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள் உட்பட பெறுமதியான பல பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வடமராட்சியில் உள்ள பொதுமக்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் சிலரைத் தொலைபேசி மூலம் மிரட்டிக் கப்பம் பெறும் நடவடிக்கைகளிலும், கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டார்கள் என்று கூறப்படும் மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்களது வங்கிக் கணக்குகளில் இருந்த 25 லட்சம் ரூபா பணத்தை முடக்கிவைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இத்தகவலை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

சட்டத்தரணி ஒருவரும் பொதுமகன் ஒரு

(08ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாம் அருகே கண்காணிப்பு நிலையம்

சென்னை, ஒக். 17

தமிழ் நாடு மண்டபம் முகாமுக்கு அருகில் இந்தியக் கடற்படையினர் கண்காணிப்பு நிலையம் ஒன்றை அமைக்க உள்ளனர்.

இலங்கையில் இடம்பெறும் மோதல்கள் காரணமாக மக்கள் நாளாந்தம் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்களை அங்கிருந்து ஏற்றிவரும் படகோட்டிகளை கண்காணிப்பது இந்த நிலையத்தின் பிரதான பணியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## மருத்துவத்துறை அனுமதி: வழக்குத் தீர்ப்பு நவ. 13 இல்

கொழும்பு, ஒக். 17

மருத்துவத்துறைக்கான அனுமதியில் பாரபட்சம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து, தமக்கு அனுமதி வழங்க உத்தரவிடுமாறு கோரி யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது தமிழ் மாணவர்கள் தாக்கல் செய்த வழக்கு மீதான தீர்ப்பு அடுத்த மாதம் 13ஆம் திகதி வழங்கப்படும்.

இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகள் யாவும் முடிவடைந்ததால், அடுத்தமாதம் 13ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதி அறிவித்தார்.

## இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் போவர் ஆராய்வு

புதுடில்லி, ஒக். 17

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதர் ஹானசன் போவர் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோருடன் போவர் கலந்துரையாடுவார்.

இலங்கையில் முடங்கிப் போயிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிப்பது, அதற்கு இந்தியா எடுக்கவிருக்கும் முயற்சிகள் தொடர்பாக போவர் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அதிகாரிகளுடன் அவர் நடத்தும் பேச்சுக்களின் பின்னர் அவர் உடனடியாக இலங்கை செல்லும் வாய்ப்பு இல்லை என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான் முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் பிரதிநிதிகள் இலங்கை வந்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்திய பின் நோர்வே திரும்பும்போது இந்தியா சென்று பேச்சு விவரங்களை வெளிவிவகார அதிகாரிகளுக்கு விளக்கி வந்தமை தெரிந்ததே. (அ-1)

## அல்லைப்பிட்டி படுகொலை வழக்கை கிளிநொச்சிக்கு மாற்ற விண்ணப்பம்

### மேல்நீதிமன்றுக்கு மனுச்செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 17

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் பகுதிகளில் 13 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் அடையாள அணிவகுப்பை கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடத்துமாறு அவ்வழக்கின் முக்கிய சாட்சியான பெண் விண்ணப்பித்துள்ளார்.

ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் தங்கியுள்ள இந்த வழக்கின் முக்கிய சாட்சியான பெண் நீதிமன்றப் பதிவாளருக்கு தொலைநகல் மூலம் அனுப்பிய விண்ணப்பம் நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் நிலை நிலவுகிறது. அங்கு வந்தால் எனக்கு உயிர் ஆபத்து ஏற்படும். எனவே இந்த வழக்கை கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு மாற்றி, அங்கு அடையாள அணிவகுப்பு நடத்தினால், முக்கிய நபர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும் - என்று சம்பந்தப்பட்ட பெண் தமது விண்ணப்பத்தில் கேட்டுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் அச்சுறுத்தலால் சரண் அடைவோருக்கு மேல் நீதிமன்றக் கட்டடத்தில் புனர்வாழ்வு நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றில் சரண் அடைந்தவர்களை வைத்துப் பராமரிப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள மேல் நீதிமன்றக்கட்டடத்தில் அமைக்கப்படும்.

பிரஸ்தாபக் கட்டடத்தின் புனர்வாழ்வு நிலையத்தை இயக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதி அமைச்சின் செயலாளரும், புனர்வாழ்வு ஆணையாளருமான கம்லத், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோருக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேல் நீதிமன்றம் அடுத்த வாரம் புதிய நீதிமன்ற வளாகத்துக்கு மாற்றம் செய்யப்படுவதை அடுத்தே அக்கட்டடத்தில் புனர்வாழ்வு நிலயத்தை அமைக்க முடிவு செய்யபட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானக்குண்டுவீச்சு ஐவர் காயம்; குடியிருப்புக்கள் சேதம்

முல்லைத்தீவு, ஒக்.17

முல்லைத்தீவில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு தெற்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் விமானப்படையினரின் 'கிபிர்' விமானங்கள் குண்டுவீச்சை நடத்தியிருக்கின்றன. இதன்போது சிறுவர்கள் மூவர் உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது- 27), வினோதினி (வயது-22), மீனா (வயது- 03) மற்றும் சுகீத்தா (வயது-8), சந்திரவதனன் (வயது -06) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குடியிருப்புக்களில் இருந்த பயன்தரும் மரங்களும் சேதமடைந்துள்ளன. பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்கள் பாதுகாப்புத் தேடி சிதறி ஓடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பஸிலுக்குப் பிரதமர் பதவி; கட்சிக்குள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.17

நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவை பிரதமராக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகள் -போட்டிருந்த திட்டங்கள் - தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மூத்த உறுப்பினர்கள் பலர் இருக்க, அவர்களை விட்டுவிட்டு, பஸில் ராஜபக்ஷவை பிரதமராக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு கட்சியின் 'சீனியர்கள்' மட்டத்திலிருந்து புகைச்சல் கிளம்பியதால், - அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படும்வரை இந்த விடயத்தில் கைவைப்பதில்லையென ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என்று தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இருப்பினும் வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர், புதிய அணுகுமுறை மூலம் அர

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - பிரி. விமானங்கள் மோதின! ஒன்று தீப்பற்றியது; அடுத்தது சிறு சேதம்!!

லண்டன், ஒக். 17

'ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ்'க்குச் சொந்தமான பயணிகள் விமானமும், 'பிரிட்டிஷ் எயார் வேஸ்' பயணிகள் விமானமும் பிரிட்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் லேசாக மோதிக் கொண்ட சம்பவம் நேற்று விடிகாலை இடம் பெற்றது.

ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் 'எயார் பஸ் ஏ- 340' ரக விமானமும் சிங்கப்பூர் நோக்கிப் புறப்படவிருந்த பிரிட்டிஷ் எயார் வேஸின் 'போயிங் - 747' விமானமுமே விபத்தில் சிக்கின.

விமானங்கள் இரண்டும் ஒரே சமயத்தில் மேலெழுந்தவேளை அவற்றின் இறக்கைகள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் விபத்து நேர்ந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர்கோவில் மகாவித்தியாலயத்துக்கான இரு கட்டடங்கள் திறக்கப்பட்டன

கட்டைவேலி,ஒக்.17

நாகர்கோவில் மகாவித்தியாலயத்துக்கென சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் கற்கோவளம் புனித நகரில் அமைக்கப்பட்ட இரு கட்டடங்களின் திறப்பு விழா அதிபர் ச.திரவியராசா தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை குருவானவர் அருள்திரு ந.அருள்நாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் மங்கள விளக் கேற்றினர்.

பிரதான மண்டபம் கொண்ட கட்டடத்தை வ்டமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும், உப கட்டடத்தை பருத்தித்துறை பிரதேச செயலர் சி.பசுபதியும் திறந்து வைத்தனர். பெயர்ப்பலகையினை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் திரைநீக்கம்செய்து வைத்தார்.

வடமராட்சி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், மருதங்கேணி உதவி அரச அதிபர் ம.சிறிஸ்கந்தகுமார், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தபேந்திரராஜா, இவ்வித்தியாலய முன்னாள் அதிபரும், தற்போதய வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபருமான சி.மகேந்திரன் ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினர்.

(அ-160)


## Calling for Tender Teaching Hospital, Jaffna.
## Painting to Intensive Care Unit.

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed Tender for Painting to Intensive Care Unit upto 10.00 a.m. on 31/10/2007. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna upto 24.10.2007 on payment on non refundable deposit of Rs. 500/=.
2. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
3. Tender Forms are issued only to contractors having valid registration in grade - M9 - and above in the Field of building constructions and other institute of construction Training and Development (ICTAD) criteria and valid member ship of National Construction of Contractors Association of Sri Lanka. (NCCASL)
4. Sealed Tender may be despatched either by registered post or hand delivered to Director Teaching Hospital, Jaffna or deposited in the Tender box at Teaching Hospital Jaffna on or before 10 a.m. on 31/10/2007.
5. Tender document may be inspected free of charge at the Resident Engineer's Office CECB TH, Jaffna.
6. For further details please contact Hospital Secretary TH, Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*


## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் உப தலைவரும், தற்போதைய கிளை 10 இன் கிளைகுழு உறுப்பினரும், சங்க பொதுச்சபை பிரதிநிதியும், நீண்ட கால கூட்டுறவாளருமாகிய

**அமரர் நா. நடராசா**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயர் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் சுற்றத்தவர்களுக்கும் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை (சி-54019)
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.


## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

2007 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை மனதார

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| 1. இ.யதுஷா | - 162 | 6. செ.மஜிதா | - 154 |
| 2. ஜெ.தனுஜா | - 161 | 7. வ.உதயப்பிரியா | - 152 |
| 3. பா.பிரவீனா | - 156 | 8. ர.தாட்சாயினி | - 150 |
| 4. பா.நர்மதா | - 155 | 9. செ.ஷர்மினி | - 149 |
| 5. த.வாசுகி | - 155 | 10. உ.சகானா | - 149 |
| | | 11. சி.பவித்திரா | - 147 |

*இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் அவர்களின் வெற்றிக்கு உறுதுணை புரிந்த அதிபரையும் பாராட்டுகின்றோம்.*

வாழ்த்துவோர்:
**அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம் பருத்தித்துறை.**
(சி/54013)

## யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில்

*தரம்-5 (2007) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களான*

| | |
|---|---|
| ஸ்ரீஸ்லங்கராஜா இன்டிக்கான் | - 145 |
| சௌந்தர்ராஜன் பிரஷாலினி | - 140 |

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | |
|---|---|
| தயாளன் திலக்சா | - 136 |
| இராஜேந்திரகுமார் சுஜீவன் | - 132 |
| தேவராஜ் கோபிகிருஸ்ணா | - 116 |
| நவரத்தினம் கோபினியா | - 108 |
| பிரேமச்சந்திரன் சுஜீபன் | - 105 |
| சிவராசா ருத்ஷிகா | - 102 |
| புவனேந்திரம் யதுர்சனா | - 102 |

*இவர்களையும் பாராட்டுவதோடு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம். (66990)


## குடும்பஸ்தர் ஒருவரும் இரு இளைஞர்களும் சரண்

யாழ்ப்பாணம்,ஒக்.17

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து மூன்று பேர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

மீசாலையை சேர்ந்த 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரும் நாவற்குழியை சேர்ந்த 28 வயது டைய இளைஞர் ஒருவர் மற்றும் சில்லாலை, பண்டத்தரிப்பை சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஆகியோரே நேற்றைய தினம் சரணடைந்தவர்களாவர்.

இவர்களைப் பாதுகாப்பாக தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-50)

## இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.17

தென்மராட்சி கால்நடை வைத்திய அலுவலகத்தினர் இன்று மட்டுவில் மத்தி கிராம அலுவலர் பிரிவிலும் நாளை வியாழக்கிழமை கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளனர். கால்நடை வைத்தியர் ஜி.ரகுநாதன் இத்தகவலைத்தெரிவித்தார்.

(203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.17

தென்மராட்சி கல்வி வலயத்தை சேந்தச் சேந்த 1ஏபி, 1சி ஆகிய பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203-207)

## வடமராட்சி பாடசாலைகளில் குருளைச் சாரணர்

வடமராட்சி,ஒக்.17

வடமராட்சி பிரதேசத்தில் சாரணர் குழுக்கள் இல்லாத பாடசாலைகளில் குருளைச்சாரணர் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

கரணவாய் மகா வித்தியாலயம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றில் இடம் பெற்ற குருளைச் சாரணர் ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட உதவி ஆணையாளர் ரவீந்திரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கத்தினால் வடமராட்சி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு குருளைச்சாரணர் சம்பந்தமான பயிற்சிகள் அண்மையில் வழங்கப்பட்டிருந்தன.இப் பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்கள் தத்தம் பாடசாலைகளில் குருளைச் சாரணர் சங்க குழுக்களை ஆரம்பித்து வருகின்றனர். (அ-170)

### பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாய் இருந்து எனது நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் சகல சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையானவரே உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன். அடியாள்


## வெற்றிடம்

*நேரக் கணிப்பாளர் பதவி*

**தகைமை:- க.பொ.த (சா/த) சித்தி**
**வயது:- 25-45**
**வதிவிடம்:- வடமராட்சி**
**விண்ணப்ப முடிவுத்திகதி 30.10.2007**

தொடர்பு:- தலைவர்,
சிற்றூர்தி சேவைச் சங்கம்,
பஸ்நிலையம், பருத்தித்துறை.
(சி/54020)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தேவதாசன் (சின்னராசா)

*(ஓய்வுபெற்ற மின்சார நிலைய ஊழியர்)*



கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாசன் 14.10.2007 ஞாயிற்றுக்கிமை இயற்கையெய்திவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் ஐயாத்துரை- சுந்தரம் தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சுனித்தா (இத்தாலி), சுகுணா (பிரான்ஸ்), ஹபீஷணன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசீலன் (இத்தாலி), விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆதவன், சிந்துபைரவி (இத்தாலி), அபிஷனா, அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2007 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று கொத்தியாலடி இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*கப்பம்புலம், சுன்னாகம்.* (66991)
*தகவல்:* **மங்கையர்க்கரசி** *(மனைவி-சிமா).*

## வீரவாகு சண்முகநாதன்

*(டச்சுறோட், சித்தன்கேணி)*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு சண்முகநாதன் 15.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், தெய்வ நாயகியின் அன்புக் கணவரும் கயிலநாயகி, கலாநாயகி (முன்னாள் ஆசிரியை), ஜெகநாதன் (பிரான்ஸ்), நிர்மலநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கெங்காதரன் (மல்லாகம்), காலஞ்சென்ற நந்தகுமார் (சித்தன்கேணி), றஞ்சினி (பிரான்ஸ்), சுசீந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் உருத்திரரூபினி (மருத்துவபீட மாணவி, ரஷ்யா), சிவப்பிரகாசம் (வர்த்தகபீடம், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு), கோபிநாத், ஜனநாத், அஸ்வினி, ஜெசிவன், அபிநாஷா, சுஜீத், சாய்ராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு றோட், சித்தன்கேணி.* (66995)
*தகவல்:* **கயிலநாயகி** *(மகள்).*

## அப்புத்துரை குணசேகரன்

*(சிறைச்சாலை அத்தியட்சகர் (S.P), மட்டக்களப்பு)*



சங்குவேலி தெற்கைப்பிறப்பிடமாகவும், கொழும்பு, பொரளையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை குணசேகரன் 15.10.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

அவரின் சொந்த இடமான சங்குவேலியில் துக்கம் அனுஷ்டிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.* (66996)
*தகவல்:* **தாய், சகோதரர்கள்,** *(அ. கணேசமூர்த்தி).*

## கணபதிப்பிள்ளை அன்னமுத்து

புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னமுத்து 15.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் கணபதிப் பிள்ளையின் அன்பு மனைவியும் சிவபாதம், திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு தாயும் தங்கமுத்து, சிவபாக்கியம், ஜெகசோதி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கெசடை வீதி, கருங்காலி, காரைநகர்.* (67000)
*தகவல்:* **வை. கணபதிப்பிள்ளை** *(கணவர்),* **க. சிவபாதம், க. திருச்செல்வம்** *(மகன்மார்)*

## திருமதி செல்லதம்பி அலங்காரம்

கொம்மாந்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி அலங்காரம் நேற்று(16.10.2007) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சிங்காரவேலு செல்லத்தம்பியின் மனைவியும், காலஞ்சென்ற சுவாமிநாதன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிங்காரவேலு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், செல்வராசா, தேவராசா, தெய்வேந்திரன், செல்வச்சந்திரன்(டென்மார்க்), தவராணி, மங்கையர்க்கரசி ஆகியோரின் தாயும், சிவனேஸ்வரி, ராஜலஷ்மி, சாரதாதேவி, புனிதவதி, ஸ்ரீதரன், அரசரெட்ணம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.10.2007) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை.* (சி/54020)
*தகவல்:* **செ.தேவராஜா** *(மகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 91 மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

வலயக் கல்வி அலுவலகத்தினரால் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வர்த்தக வங்கியின் கிளை முகாமையாளர் வி.நிருசன் மங்கள விளக்கு ஏற்றுவதையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் ஆகியோரையும் முதலாவது படத்தில் காணலாம்.

கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு சித்தி பெற்ற மாணவர்கள் மாலை சூட்டிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் : அருணன்)

# சட்டக் கற்கைநெறிகள் 2010 முதல் ஆங்கில மொழிமூலமே நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.17

சகல சட்டக் கற்கை நெறிகளும் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆங்கில மொழி மூலமே அமுல்படுத்தப்படும் எனப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார்.

சட்டக் கல்லூரி மாணவர் சங்கத்திற்கும் பிரதம நீதியரசருக்கும் இடையிலான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டில் இருந்து சட்டக் கல்லூரியில் தமிழ், சிங்கள மூலமான கற்கை நெறிகள் நீக்கப்பட்டு முழுமையாக ஆங்கில மொழிமூலம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டக்கல்லூரி வரலாற்றில் சட்டக் கல்வியானது மிக உயர்ந்த தரத்தில் பேணப்படுகின்ற ஒரு கல்வி முறையாகும்.

மேலும் சட்டக் கல்வியில் உயர்தரத்தில் உள்ள சட்டத்தரணிகள், சட்டவியலாளர்கள் மூலமே இக் கற்கை நெறி நடத்தப்படுகின்றது.

இலங்கையில் சட்டக் கல்லூரி 1919 இல் உருவாக்கப்பட்டது. தற்போது 30 மில்லியன் ரூபா செலவில் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது - என்றும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்தார். (202 - 95)

# முறையாகக் கழிவகற்றப்படாமையால் பொலித்தீன்கள் வயல்களில் தேங்கும் நிலை

யாழ்ப்பாணம்,ஒக்.17

குடாநாட்டில் சில பிரதேச சபைகளால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் வெளியான இடங்களில் கொட்டப்படுகின்றன. இதனால் கழிவுகளில் காணப்படும் பொலித்தீன் பைகள் காற்றுடன் பறந்து வயல் நிலங்களில் தேங்கிக் கிடப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. கழிவுப் பொருள்களை முறையாக அகற்றாமையாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்தக் கூடிய இப் பொலித்தீன் பைகள் வீணாக இருப்பதுடன் வயல் நிலங்களில் அவை தேங்கிக் கிடப்பதால் விவசாய நடவடிக்கைகளில் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்த விடயம் குறித்து கேட்டபோது யாழ்ப்பாணத்தில் மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்தக் கூடிய வசதிகள் இதுவரை இல்லை. எனினும் யாராவது இத் திட்டத்தைச் செயற்படுத்த முன்வந்தால் ஊக்குவிப்பு வழங்க முடியும் - எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலித்தீன் பொருள்கள் மீள் பயன்பாட்டிற்கு உட்படுத்த வேண்டும். அல்லது கழிவகற்றும் பிரதேச சபைகள் அவற்றை முறையாக அகற்றுவதற்கு முன்வர வேண்டும் எனப் பாதிப்புறும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (202 - 131)

## இன்றைய போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.17

வடமராட்சி பாடசாலைகளின் 16, 18 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு காலை - 8 மணி**

- ஹாட்லி எதிர் கொற்றாவத்தை அ.மி.க.
- சிவகுரு வித்தி.எதிர் அல்வாய் றோ.க.
- கரணவாய் ம.வி எதிர் உடுப்பிட்டி அ.மி.க.

**பிற்பகல் 1.30 மணி**

- வல்வெட்டி இ.த.க. எதிர் பொன்னம்பல வித்தி.
- நெல்லியடி ம.ம.வி. எதிர் கம்பர்மலை வித்தி.
- விக்னேஸ்வரா எதிர் வேலாயுதம் ம.வி.

(50-155)

## யாழ்.வலயத்தில் சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சதுரங்கப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வலய அலுவலகத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் தரம் 5 குழுப்போட்டியில் முதல் 4 இடங்களைப் பெற்ற மாணவர்களும் தனிநபர் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்கள் பங்குபற்றலாம். (202)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் விழா இன்று புதன் கிழமை பி.பகல் 2 மணிக்கு உரும்பிராய் இம்மானுவேல் தேவாலய மண்டபத்தில் திருமதி விசாகினி பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஊரெழு, உரும்பிராய், கோப்பாய் ஆகிய முன்பள்ளிகளின் ஆசிரியர்களை கௌரவிக்கும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்வார்.

* * *

கட்டைவேலி,ஒக்.17

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நாளை 18 ஆம் வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை கோழிகளுக்கு அம்மை நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

கோழி வளர்ப்போர் அம்மை நோய் தடுப்பு மருந்தைத் தவறாது கோழிகளுக்குப் போட்டுக் கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் கேட்டுள்ளார். (203-160)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலையின் முடிவுகள் வருமாறு :-

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

சி.பராபரன் (அகில இலங்கையில் - 4 ஆம் இடம்) (186), பி.ஹாரணி (அகில இலங்கையில் - 8 ஆம் இடம்) (184), ச.சங்கவி அகில இலங்கையில் - 12 ஆம் இடம்) (183), த. கஜானியா (179), த.டிலோஷா (176), த.சங்கவி (173), ம.திரிஷிகா (173), ர.அபிராமி (172), இ.உதயபவன் (170), பா.செந்துஜன் (170),

இ.செந்தூரன் (169), இ.ஆதீஷன் (169), க.கோபிகாந்த் (169), வி.பிரணவன் (169), சி.சரண்யன் (169), தெ.ஆதவன் (168), சா.ஜிதுர்சனன் (168), சி.துவாரகன் (168), பு.சர்மிலன் (168), சி.நேருகான் (167),

மு.துவாரகா (166), ஏ.திஷாந்தினி (166), ஆ.சாருஜன் (165), து.கோகுலன் (165), வி.தேவசேனா (165), நா.டினோஜா (165), ப.நிக்ஷன் (164), ர.சஞ்சயன் (164), சி.சுருதி (164), பா.கஜந்தன் (163),

சி.சிந்துஜன் (163), ஜெ.ஜெனீபா (163), வெ.பாலயசோதினி (161), பா.செந்தூர்ச்செல்வன் (161), நி.பிரசாந்தி (161), கு.நிருஜன் (161), சோ.டனேக்கா (161), செ.கிரிசாளினி (161), ப.மதுஷா (161), ந.ரஜீவன் (160),

ஜெ.ஜெயலக்ஷன் (160), யோ.நிதர்சன் (160), சி.குகதர்சன் (160), ச.திசாந்தன் (159), ம.நிதுர்சன் (159), உ.ஹோபிஷா (159), தி.கிரிஜா (159), சி.தார்மிகன் (158), அ.மதுசாந் (158), ஜெ.ஆர்த்தன் (158), ர.வித்தியசங்கவி (158), லோ.டசிந்தா (157), ஆ.ஸோபிகா (157), தே.வரப்பிரகாஸ் (157), க.சரணிகா (156), அ.சுபஸ்திகா (156), ச.ஐஸ்வர்யா (156), பா.யோதினி (156), இ.ஜோய்நிஷான் (156), ஆ.கஜாணன் (156), ம.மயூரன் (156), கு.அர்ச்சனா (156),

*(வளரும்)*

## நவாலி வடக்கில் ஆலயப் பிரதேசத்திற்கு மின் இணைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மின்சார வசதியின்றி இருந்த நவாலி வடக்கு - பெத்தனாச்சியார் ஆலயப் பகுதிக்கு விரைவில் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

பிரதேசத்தில் மின் கம்பங்கள் நாட்டப்பட வேண்டிய பகுதியை மின்சார சபையினர் பார்வையிட்டு அளந்து சென்றுள்ளனர்.

இப்பகுதிக்கு மின் வழங்குமாறு பெத்தனாச்சி ஆலய பிரதம குருவும் - நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த ச.ச. நிலையமும் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-95)

## மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.17

அளவெட்டி வடக்கு சந்நிதி முருகன் ஆலய பரிபாலன சபை நடத்தும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கந்தரோடை சவாரித் திடலில் சபைத் தலைவர் ப.உதயகுமார் தலைமையில் நடைபெறும். (202)

# கல்வியங்காட்டின் பல பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கல்வியங்காட்டுப் பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் இரவு நேரங்களில் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கட்டைப்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற திருட்டுக் கும்பல், வீட்டின் சொந்தக்காரர்களிடம் நகைகள், பணம் என்பன தருமாறு மிரட்டியுள்ளது. தம்மிடம் எதுவும் இல்லை என்று வீட்டுக்காரர் கூற அங்கிருந்த கணனி ஒன்றை அடித்து நொருக்கிவிட்டுச் சென்றுள்ளது அக் கும்பல்.

இதேவேளை - அன்றைய தினமே கல்வியங்காடு, ஆடியபாதம் வீதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்ற திருடர்கள் அங்கு நடமாடியுள்ளனர். அதனை அவதானித்த வீட்டுச் சொந்தக்காரர்கள் கூக்குரலிடவே திருடர்கள் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன், கடந்த வாரம் கலைமகள் வீதியில் உள்ள வீடொன்றின் கதவைக் கொத்தி வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கு பட்டாசு வெடிகளைக் கொளுத்திப் போட்டுவிட்டு பிளாஸ்ரிக் துவக்கைக் காட்டி மிரட்டியுள்ளனர்.

மேலும் அங்கு இருந்தவர்களையும் தாக்கியுள்ளனர். இதனால் அங்கிருந்த குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். குறிப்பிட்ட இந்த வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவும் திருடர்கள் சென்றதாகக் கூறப்படுகிறது.

நல்லூர் வடக்கு, விநாயகர் வீதியில் உள்ள வீடு ஒன்றின் வளவினுள்ளும் கடந்த சனிக்கிழமை இரவு திருடர்கள் நடமாடி உள்ளனர்.

இதனை அவதானித்த வீட்டுச் சொந்தக்காரர் அயலில் உள்ளோருக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததையடுத்து அயலவர்கள் ஒன்று திரள்வதை அவதானித்த திருடர்கள் தப்பி ஓடியதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் இச் சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (203)

# எச்.என்.பி.காப்புறுதி நிறுவனத்தின் புதிய வளப்படுத்தல் திட்டம் அறிமுகம்

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் தொடர்பு கொள்ளலாம்

யாழ்.வீதியில் இயங்கிவரும் ஹற்றன் நஷனல் வங்கயின் காப்புறுதிக் நிறுவனம் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்தக் கூடிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத் தகவலை நிறுவனத்தின் கிளை முகாமையாளர் அ.றஞ்சித் தெரிவித்தார்.

எமது நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத் திட்டத்தில் இணைபவர்களுக்குச் சில சலுகைகள் மேலதிகமாக வழங்கப்படும்.

2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பெறுமதியான பரிசுப் பொருள் ஒன்றும் வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பான விவரங்களை அறிய விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள் அலுவலக நேரத்தில் அலுவலகத்துடன் உடனடியாக நேரிலோ அல்லது 021 222 6016 என்ற தொலைபேசி எண் மூலமோ தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவில் கிழக்கில் தங்கநகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.17

வீட்டில் ஆள்கள் இல்லாத வேளையில் உள்நுழைந்த திருடன் அங்கிருந்த 85ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளையும் ஒரு தொகைப் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளான்.

இச்சம்பவம் அண்மையில் நுண்ணாவில் கிழக்கு, கல்லடி ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# உயிலங்குளம் சாவடியில் பணிபுரிவது குறித்து செஞ்சிலுவைக் குழு ஆராய்ந்து வருகின்றது

யாழ்ப்பாணம்,ஒக்.17

உயிலங்குளம் சோதனைச் சாவடியில் மீண்டும் தமது பணிகளை முன்னெடுப்பதில் உள்ள சாத்தியப்பாடுகள் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடி நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள மாதாந்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களினதும் எமது ஊழியர்களினதும் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய சில சம்பவங்களினால் உயிலங்குளம் சோதனை நிலையப் பகுதியிருந்து செப்ரெம்பர் 3 ஆம் திகதியன்று எமது குழு விலக வேண்டியிருந்தது. மீண்டும் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய சாத்தியப்பாடுகள் பற்றி இலங்கை அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் கலந்துரையாடித் தொடர்ந்தும் நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றோம்.

2002 இல் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்களதும் பொருள்களினதும் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக ஓமந்தை, உயிலங்குளம் சோதனை நிலையங்களில் எமது குழு தனது பிரசன்னத்தை மேற்கொண்டு வருகின்றது.

எவ்வாறாயினும் இந்த நுழைவாயில்கள் மூடப்படவேண்டுமா அல்லது திறக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பது இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் தான் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.. (202)

## பாசத்தோடு வாழ்த்துகின்றோம்



**இளந்திரையன் கஜானன்**

*(புளியங்கூடல்)*

யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் 161. இவர் மேலும் பல திறமைச் சித்திகள் பெற வாழ்த்துவதோடு கற்பித்த ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
(66985) வேலணை மேற்கு, வேலணை. **அப்பப்பா- சாந்தலிங்கம்.**

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

*2007 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது மகள் செல்வி*

**ஷாலினி சிறிதரன்**

*அவர்களைப் பாராட்டுவதுடன் அளவெட்டி தென்னிந்திய திருச்சபை ஆரம்ப பாலர் பாடசாலை ஆசிரியைகள் சுதா, மனோரஞ்சிதம் ஆகியோரையும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் மனமார்ந்த நன்றியுடன் பாராட்டுகின்றோம்.*



அளவெட்டி மேற்கு. (66944) **பெற்றோர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



2007 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தி அடைந்த யா/உடுவில் மகளிர் கல்லூரி மாணவன் செல்வன்

**மகாதேவன் தந்தகரன்**

அவர்களை மேலும் மேலும் பல உயர்வுகள் பெற்றுக் கல்வியிலும் பண்பிலும் உயர்ந்து வாழ விநாயகப் பெருமானையும் ஐயனார் பெருமானையும் வேண்டி வாழ்த்துகின்றேன். சித்தியடைய வழி வகுத்த அனைவருக்கும் நன்றி.

வாழ்த்துபவர்:
"ஜெயநிகேதன்", பங்களா லேன், மல்லாகம். (66974) அம்மம்மா.

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
Head Off : 15, Sirambiyadi Lane, Jaffna
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna
T.P:- 021-222 8250,0777 222422

**Diploma in Computerized Accounting...**

**Quick Book Premier + ACCPAC + MYOB**

ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்
Weekend Days: 20/10/2007, 21/10/2007 10AM
Weekdays: 22/10/2007, 25/10/2007 02PM

Tally புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்**

மலர்வு 09.11.1981
உதிர்வு 03.09.2007

*இதயா நீ ஏன் சென்றாய்?*
*இதயம் வந்ததோ எம்மை விட்டுச் செல்ல*
*எத்தனை கற்பனை செய்தாயோ?*
*எண்ணி எண்ணி வருந்துகின்றோம்.*

சுப்பிரமணியம் இதயராஜ் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.10.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு தாங்களும் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*68/2, இலந்தைக்குளம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (சி/54005) **குடும்பத்தினர்.**

## நவராத்திரி பூஜைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

நெடுந்தீவு மகாவித்தியாலய இந்து இளைஞர் மன்றம் பாடசாலையிலுள்ள இந்து வழிபாட்டுத் தலத்தில் நவராத்திரியை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகளை நடத்தி வரு கின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி தினத்தையொட்டி சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (111)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் நவராத்திரி பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 20 ஆம் திகதி மானம்பூத் திருவிழா நடைபெறும். (100)

## விற்பனைக்கு

தற்போது வாகனத் தொடரணியில் ஓடிக்கொண்டிருக்கும் நல்ல நிலையிலுள்ள 47-XXXX கொமட் சுப்பர் அசோக் லேடன் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776391080, 0114991478.

## தேவை

கல்பேட் ஊர்க்கோழிகள், ஊர்க்குஞ்சுகள் எந்நாளும் கொள்வனவு செய்யப்படும்.
**தாசன் பாம்**,158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (சி/54009)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் தபால் மூலம் இலக்கணம்,O/L, A/L, B.A. வினா விடை வகுப் புகள் By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.
'THE ROYAL IS THE BEST'

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA *புறொயிலர் குஞ்சுகள் 19.10.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.*
- றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- ரவி, சாவகச்சேரி
- றாஜ் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, நெல்லியடி
- ஸ்ரீ வித்ஜா ரேடர்ஸ், அச்சுவேலி
- மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி
- சிவம் ஸ்ரோர்ஸ், ஏழாலை

T.P.: 222 3529, 222 2867. (66063)

## தோட்டக்காணி விற்பனைக்குண்டு

*தெல்லிப்பளை- பண்டத்தரிப்பு வீதியில் சிறுவிளான்- கிராயிட்டி வைரவ சுவாமி கோயிலுக்கு வடக்கில் அமைந்துள்ள (செம்பாட்டு மண்) தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. இந்த தோட்டக்காணிக்குள் ஒரு சிறு வீடும், அதனுடன் இணைந்த குழாய்க்கிணறும் மேலதிகமாக உண்டு. மின்னிணைப்பு பெறுவதற்கு ஏற்ற சூழலில் காணி அமைந்துள்ளது. விவரங்களுக்கு தொலைபேசி இலக்கம்: 021 222 3081 உடன் தொடர்பு கொள்க.* (சி/54006)

## அஞ்சலி பிளாஸ்ரிக் தொழிலகம்


மோட்டார் சைக்கிள், வாகனங்களின் பிளாஸ்ரிக் உதிர்ப்பாகங்கள் வேறு சகல பிளாஸ்ரிக் பொருள்களும் சிறந்த முறையில் ஒட்டிக் கொடுக்கப்படும். மற்றும் வாகனங்கள், கடைகளுக்கான ஸ்ரிக்கர் போட் எழுத்து வேலைகளும் துல்லியமாக ஒட்டிக் கொடுக்கப்படும்.
தொடர்பு: **ச.அரிகரன்,**
196, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(66987) T.P.: 0776997223.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவரான செல்வன்*

**வே.லக்சாந்**

*அவர்களைப் பாராட்டுவதுடன்* வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த மாணவர்களான செல்வன் சி.சிவஜன், செல்வி த.தர்மினி, செல்வன் ம.வாசுதன், செல்வி ம. கஸ்தூரி *ஆகிய மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*



(66993)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள்.**


## சாவகச்சேரியில்......!

**புதிய மிருதங்க, ஒகன் வகுப்புகள் ஆரம்பம்**

21.10.2007 (ஞாயிறு) விஜயதசமி அன்று காலை 8 மணிக்கு புதிய மிருதங்க, ஒகன் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
இன்றுமுதல் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**க. மோகனராஜலிங்கம்,**
*பதிவாளர்*
*கொமர்ஷல் வங்கி முன் வீதி,*
*சாவகச்சேரி.*
தொ.பே. **0777078349.** (6154008)

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம்
அதிபர் ஒறேற்றர் **சி.சுப்பிரமணியம்**
அவர்களின்



**13 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை**

தலைவர்: **திரு. க.சிவாஜி**
*(முதல்வர், ஸ்கந்தவரோதயா கல்லூரி, சுன்னாகம்)*
*காலம்:* நாளை (18.10.2007) வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு
*இடம்:* கல்லூரி மண்டபம்

நினைவுப் பேருரை
கலாநிதி கு.மிகுந்தன் Ph.D. (பீடாதிபதி, விவசாய உயிரியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

விடயம்
"யாழ்.மாவட்டத்தில் சூழல் மாசடைதலும் சுகாதாரச் சீர்கேடும்"

நிறைவுரை: **செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்**
(உப அதிபர், ஸ்கந்தவரோதயா கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒறேற்றர் குடும்ப உறுப்பினர்கள். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் *ஸ்கந்தவரோதயா கல்லூரி.* (66988)

## தசாப்த கால பிரிவில்......!



**அமரர் கனகசபை நடேசன்**

*(பங்காளர்- சிவகணேசன் ஸ்ரோர்ஸ் )*

உதிர்வு: 17✱10✱1997

தசாப்தம் ஒன்று தாண்டினாலும்
திலகமே! தீரவில்லை துக்கம் எமக்கு!
தூங்கிவிட்ட எம் தெய்வமே - உமது
ஆத்மா சாந்தியடையத் தொழுகின்றோம்.

*23, கோபால் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி 29,30ஆம் திகதிகளில் வேலைநிறுத்தம்

கொழும்பு,ஒக்.17

அரச ஆசிரியர்கள் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை முன்வைத்து இம்மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

இவ்வேலை நிறுத்தம் காரணமாக நாடளாவிய ரீதியில் கல்வி நடவடிக்கை கள் இரண்டு நாள்களும் முற்றாகப் பாதிக்கப்படும் என்று அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜய சிங்க 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை முன்வைத்து நாம் நீண்ட நாள்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றோம்.

நாம் ஜி.சீ.ஈ. உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டோம். அது வெற்றியளித்தது. ஆனால், அப்போது எமது சம்பளப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இதற்கெனத் தனிக்குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் 2008ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் ஆசிரியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் அரசு வெவ்வேறுபட்ட கருத்துகளைக் கூறிவருகின்றது.

நாம் பல தடவைகள் கல்வி அமைச்சருடன் பேச்சுகள் நடத்தியுள்ளோம். எந்தப் பேச்சும் வெற்றியளிக்கவில்லை. அரசு எமது கோரிக்கையை ஏற்காமையே இதற்குக் காரணம்.

அரசிற்கெதிராகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்துவதன் மூலமே எமது கோரிக்கையை வென்றெடுக்க முடியும் என்று நாம் நம்புகிறோம்.

இதன் காரணமாகவே இம்மாதம் 29,30 ஆகிய திகதிகளில் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது கோரிக்கையை வென்றெடுக்க அரசில் எவருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவுள்ளோம். எமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும். - என்றார். (சி)

# மஹிந்த - ஷாருக்கான் புதுடில்லியில் சந்திப்பு

கொழும்பு,ஒக்.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்தவேளை இந்தியாவின் பிரபல பொலிவூட் நடிகர் ஷாருக்கானைச் சந்தித்துப் பேசினார்.

'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதி மாநாட்டை முடித்துக்கொண்டு டில்லியில் ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளார். அவர் தங்கியுள்ள ஹோட்டலுக்குச் சென்ற ஷாருக்கான் ஜனாதிபதியை சந்தித்தார். ஜனாதிப்தி ஷாருகானுக்கு அரச சார்பில் நினைவுச் சின்னம் ஒன்றைக் கையளித்தார்.

இதேவேளை புதுடில்லியில் உள்ள இலங்கைக்கான தூதுவராலயத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை ஜனாதிபதி திறந்து வைத்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# வவுனியா நலன்புரி நிலையங்களிருந்த 200 குடும்பங்கள் மீள்குடியமர்வு

வவுனியா, ஒக்.17

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் சொந்த விருப்பத்தின் பேரில் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இதனடிப்படையில் தற்போது 200 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன - என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்தவையாவது:-

வவுனியா மாவட்டத்தில் நீண்டகாலமாக உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் பூந்தோட்டம் மற்றும் சிதம்பரபுரம் ஆகிய முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

அகதிகளுக்கான ஐ.நாவின் தூதரகத்தின் உதவியுடன் தற்போது அகதிகள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தற்போது 1,500 குடும்பங்கள் இந்த அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அத்துடன், இந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அகதிகளுக்கான ஐ.நா. சபையின் தூதரக அலுவலகம் நிதியுதவிகளை வழங்கியிருக் கிறது.

இம்மக்களை படிப்படியாக நாம் வசதி வாய்ப்புக்களுடன் மீளக்குடியமர்த்தி வருகின்றோம்.

அப்பகுதியில் இருக்கும் மக்களை மாத்திரமே மீளக்குடியமர்த்தி வருகின்றோம். ஆனால், சில மக்கள் நகரத்திற்கு அண்மையில் குடியமர விருப்பம் தெரிவித்திருக்கின்றனர். நகரத்திற்கு அண்மையில் இடம் இல்லாத காரணத்தினால் அதற்குச் சற்றுப் புறம்பாக உள்ள இடங்களில்தான் இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றோம் - என்றார். (சி)

# வெளிநாடு வேலைக்குச் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது

கொழும்பு,ஒக.17

இலங்கையிலிருந்து தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடுகளிற்குச் செல்வோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்திருக்கிறது - என்று குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.லி. அபயக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

5 வருடகாலப்பகுதிக்குள் 20 லட்சம் கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு 2002ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஏற்கனவே 20 இலட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப் பட்டுவிட்டன.

5 வருடங்களில் விநியோகிக்கப்பட வேண்டிய கடவுச்சீட்டுத் தொகை மூன்றரை வருடங்களில் விநியோகித்து முடிவடைந்துவிட்டது

அடுத்த மூன்றரை வருட காலத்திற்குள் 30 இலட்சம் கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளோம். இலங்கையிலிருந்து பலர் மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக மாற்றமடைந்து கொரியா, சைபிரஸ், ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு அதிகளவானோர் செல்கின்றனர் - என்றார். (சி)

# 12 நாள்களில் 137 புலிகளை கொன்றதாகப் படையினர் தகவல்!

கொழும்பு,ஒக். 16

வடக்கு, கிழக்கில் கடந்த 12 நாள்களுக்குள் படையினருக்கும், புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலின்போது 137 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார நேற்று முன்தினம் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது-

படையினருடன் நேரடியாக மோதமுடியாத புலிகள், படையினர் மீது கிளைமோர் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். சிறு சிறு குழுக்களாக வந்தும் தாக்குதல் நடத்துகின்றனர்.

அத்தனை தாக்குதல்களையும் படையினர் மிகவும் வெற்றிகரமாக முறியடித்து வருகின்றனர். மக்களின் தகவல்கள் காரணமாகவும், படையினரின் தேடுதல் நடவடிக்கை காரணமாகவும் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 12 நாள்களுக்குள் வவுனியாவில் 2,445 நிலக் கண்ணி வெடிகள் உட்பட வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களும், வெடிபொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதே காலப்பகுதியில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 137 புலி உறுப்பினர்களும், 10 படையினரும் கொல்லப்பட்டனர்; 21 படையினர் காயமடைந்தனர் - என்றார் (சி)

# வாசகர் திருமுகம்

## பாதசாரிகள் படும்பாடு!

யாழ்ப்பாண நகரத்தில் நடமாடுவதில் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் யாவரும் அறிந்ததே. அது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் கண்கூடு.

பாதசாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட நடைபாதை முழுவதையும் வியாபாரிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது யார் என்பது தெரியவில்லை. பெரியவியாபாரிகள் தொடக்கம் நடைபாதை வியாபரிகள் வரை பொதுமக்களின் போக்குவரத்தைத் தொடர்ந்து தடைசெய்து கொண்டே இருக்கிறார்கள். அதன் காரணமாக மக்கள் நடுத்தெருவில் நடந்து செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர் படும் சிரமம் சொல்லி மாளாது. விதிகளை மீறிச் செலுத்தப்படும் வாகனங்கள் இவர்களுக்குப் பெரும் கஷ்டங்களை ஏற்படுத்துகின்றன.

மாநகர சபை இந்த மிக முக்கியமான விடயத்தில் பாராமுகமாக இருப்பதன் காரணம் என்ன?

*கொக்குவில்.*

வை.சந்திரபாலன்.

## கட்டாக்காலி நாய்களை ஒழித்துக்கட்ட முடியாதா?

கட்டாக்காலி நாய்களின் தொல்லை இன்று குடாநாட்டில் மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. பாதசாரிகளும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்பவர்களுமே நாய்களின் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். காலையில் தெருவுக்கு வந்ததும் வழி நெடுகிலும் நாய்மலம், நாய்கள் கடிப்பதும் குறுக்கே ஓடி விபத்துகள் ஏற்பட்டு மக்கள் காயமடைவதும் தினமும் பல இடங்களில் நடைபெறும் சம்பவங்களாகி விட்டன.

பாதிக்கப்படுகிறவர்கள் அனேகமாக அரச வைத்திய நிறுவனங்களுக்கே சிகிச்சைக்காக வருகிறார்கள். ஏற்பு மற்றும் விலங்கு விசர் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் காயத்திற்காக ஊசி மருந்துகள், காயங்கள் சுகமடைய கிட்டத்தட்ட 2 வாரத்திற்கு மேல் மருந்து கட்டுதல் போன்ற சிகிச்சை அளிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ரூபா 500 இல் இருந்து ரூபா 2000 இற்கும் மேல் சுகாதாரத் திணைக்களம் செலவு செய்கிறது. இவையாவும் தவிர்க்கக் கூடியவை. இதனை கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதும் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமே செயற்படுத்தலாம். இவ்வேலைத்திட்டத்திற்கு பொதுமக்கள், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள், கால்நடைத் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் போன்றவையும் பங்கேற்கவேண்டும். மேலாக அவர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

'மஹிந்த சிந்தனை'யில் நாய்களைக் கொன்று ஒழிக்கக் கூடாது என கூறப்பட்டுள்ளதாம். அதற்காக கட்டாக்காலி நாய்களை அலட்சியம் செய்யமுடியாது. கட்டாக்காலி நாய்களுக்கு ஊசி ஏற்றுதல் மற்றும் அறுவைச் சிகிச்சை மூலம் அதன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி 2-3 வருடங்களில் இல்லாதொழிக்கலாம். பெண் நாய்களுக்கு கால்நடை வைத்தியரினாலேயே அறுவைச் சிகிச்சை செய்யப்படவேண்டும். அதற்கு ரூபா 1000 மட்டில் செலவு என அறியக் கூடியதாக இருக்கிறது. ஆனால். ஆண் நாய்களுக்கு சுலபமாக பயிற்சி பெற்றவர்கள் அறுவைச் சிக்சையைச் செயலாம். அதற்கு இப்போது விலங்கு விசார் நோய் தடுப்பு ஊசி நாய்களுக்கு ஏற்றுகிறவர்களுக்கு இந்த அறுவைச் சிகிச்சையில் பயிற்சி அளிக்கப்பட்டால் இப்பொழுது கிராமங்களுக்கு ஊசி ஏற்றச் செல்லும் நாள்களிலேயே அறுவைச் சிகிச்சையும் செய்யலாம்.

இங்கே ஒரு பிரச்சினை எழுகிறது. கட்டாக்காலி நாய்களை யார் பிடித்துக் கொடுப்பது என்பதே. உள்ளூராட்சி சபை இவ்வேலைத் திட்டத்திற்கு முன்வராவிட்டால் விரும்பிய பொதுமக்களே இதனைச் செய்யலாம். அதற்கு அவர்களுக்கு ஊக்குவிப்பு பணம் கொடுத்தாலேயன்றி முன்வரமாட்டார்கள். நாய் கடித்த பின் அல்லது விபத்துக்குள்ளானதின் பின் அரசாங்கமும் தனியாரும் சிகிச்சைக்காக செலவு செய்யும் பணத்தில் மிகச் சிறிய பங்கே ஊக்குவிப்பு பணமாகும். இதனை சம்பந்தப்பட்ட அரச நிறுவனம் அல்லது பொதுமக்கள் வழங்கலாம் அல்லவா?

*யாழ்ப்பாணம்.*

வே.மகேந்திரன்.

# வடக்கு உள்ளூராட்சித் தேர்தல்; புதிய சட்டமூலம் நாடாளுமன்றுக்கு

கொழும்பு,ஒக்.17

வடமாகாண உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல்களுக்கு மீண்டும் வேட்பு மனுக்களைக் கோருவதற்கான உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டமூலம் எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அரசினால் மும்மொழியப்பட்ட இந்தத் திருத்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித் திருந்தது. இதனையடுத்தே இச் சட்டமூலத்தை எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உத்தேசித்திருக்கிறது. சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு 6 மாதத்துக்குள் குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும் என்று உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார். (சி)

மருதனார் மடத்தில என்னவாம்...



"ரீச்சர்... மொழி பார்க்க எங்களையும் கூட்டிப் போவீங்களா?"

காத்திருங்கள்....

20 ஆம் திகதி வரை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பெரிய நாவலடி, கொடிகாமத்தைச் சேர்ந்த
**அமரசேகரம் - கலா**
தம்பதியரின் செல்வப்புதல்வியும்
**ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலய**
மாணவியுமான
**செல்வி அனித்துஷா**

2007ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகள் பெற்றமைக்கு எமது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன் மேலும் பல்கலைகளையும் கற்று மேலோங்க வாழ்த்துகின்றோம். இவரது கல்வி வளர்ச்சிக்காக வழிகாட்டிய பெற்றோர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

தவசிகுளம், மிருசுவில். (66896) **யோகம் மாமா குடும்பத்தினர்.**

## கேன் புற்றுநோயாளர் காப்பகம்

**சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்**

இக்காப்பகத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக சேவை மனப்பான்மையும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**
**எழுதுவினைஞர் (Clerk)**
**தாதி உதவியாளர் (Nurse Aide)**
**உதவியாளர்கள் (Helpers)**
**சாரதி (Driver)**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதி 31.10.2007 ஆகும். விண்ணப்பம் அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
**தலைவர்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

ஒவ்வொரு பதவிக்கும் தகுதி உடைய, தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் மீண்டும் மறுவிண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பப் பத்திரங்களை கேன் நிறுவன காரியாலயத்தில் 2007 ஒக்டோபர் 22 முதல்31 வரை காலை 9.00 - 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம். (66966)

## அருள்முருகன் திருமணப் பணியகம்

பணியகத்தில் மணப்பொருத்தத்திற்காக இணைந்துள்ள மணமக்கள் விவரங்களை அறியவும் பணியில் இணைய விரும்புவர்கள் தொடர்புகொள்ளலாம். T.P.: 2229334

## சேவை

55,000 அமெரிக்க Green Card லொத்தர் விண்ணப்ப விவரங்களுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை 14.10.2007 உதயனைப் பார்க்கவும்.

**Penguin Book Shop,**
B2/F23, Bloemendhal Flats, Colombo -13
(F/53960) T.P.: 2438367, 077 5438898

## சாவகச்சேரியில் மாணவருக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிச் சாவகச்சேரி நகரசபை பொது நூல் நிலையப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி மீசாலை பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறுமென நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (202-207)

## 2,100 கிலோ எடையில் 'மெகா' கொத்துரொட்டி!

கொழும்பு,ஒக்.17

கொழும்பிலுள்ள ஹில்டன் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் அதன் 21ஆவது ஆண்டு நிறைவையொட்டி கொத்துரொட்டி தயாரிப்பில் சாதனை புரிய திட்டமிட்டுள்ளது. இதற்காக 2 தொன் எடைகொண்ட 'மெகா' கொத்துரொட்டி தயாரிக்கப்படும் என்றும் தயாரிப்புப் பணியில் 40 பேர் வரை ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் ஹில்டன் ஹோட்டல் நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

525 கிலோ கோதுமைமா ரொட்டி 400 கிலோ கோழி இறைச்சி, 500 கிலோ மரக்கறிகள், 7 ஆயிரம் முட்டைகள் என்பவற்றைக் கொண்டு இந்த கொத்து ரொட்டி தயாரிக்கப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி இந்தக் கொத்து ரொட்டி தயாரிக்கப்பட்டதும், அது கருணை இல்லங்களுக்கு அன்பளிப்பாக இரவு உணவுக்காக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொத்து ரொட்டியின் மொத்த நிறை 2,100 கிலோகிராம் ஆக இருக்கும்.

இந்த 'மெகா' கொத்துரொட்டி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்கும் என்று ஹில்டன் ஹோட்டல் நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றது. (த)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் வசிக்கும் சிவானந்தன் - சுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வன்
**சங்கீத்**
(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன்)
2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பிரான்சில் வசிக்கும் மாமன்மார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சகல கலைகளும் கற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. (66972)
தகவல்:
**பெ.செல்லத்துரை.**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் கமலநாதன்**
(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்,
B.A., Dip. in EDU.,S.L.P.S. Grade -I)

தோற்றம்
22✱12✱1939

மறைவு
15✱10✱1999

திதி:பூர்வபக்க சஷ்டி 17.10.2007

**எட்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்**
**அழியாத உங்கள் நினைவை**
**சுமந்து நிற்கும்**
**இதயம் ஏங்குதய்யா!**

திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்.
கோக்குவில் மேற்கு.
கோக்குவில். (66957)
உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
12.05.1939


விண்ணில்
18.09.2007

**திருமதி தர்மலிங்கம் கமலாம்பிகை**

கடந்த 18.09.2007 செவ்வாய்க்கிழமை அன்று சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 31ஆம் நாள் பூர்வபக்க ஸப்தமி திதியில் சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவி திருமதி தர்மலிங்கம் கமலாம்பிகை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையங்கள் சாத்தியோருக்கும், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் பத்திரிகைகள் மூலம் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (17.10.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துமாரி அம்மன் கோயிலடி,
சூராவத்தை, சுன்னாகம். (62226)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி ஐயாத்துரை இலட்சுமி

காலையடி தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இலட்சுமி(தர்மகர்த்தா, காலையடி படை பத்திரகாளி கோயில்) 15.10.2007 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் (முன்னாள் ஊழியர், தொலைத்தொடர்புத் திணைக்களம்) மனைவியும் பஞ்சலிங்கம் (முன்னாள் சாரதி, இ.போ.ச., காரைநகர் சாலை), இராசகுமாரி(கனடா), தர்மகுலசிங்கம் (முன்னாள் ஊழியர், தொலைத்தொடர்புத் திணைக்களம்), கெங்காதரன்(முன்னாள் ஊழியர், தொலைத்தொடர்புத் திணைக்களம்), செல்வராசா (டென்மார்க்), குணரத்தினம் (நோர்வே), சாரதாதேவி(இத்தாலி) ஆகியோரின் தாயும் ப.ஜெயக்கொடி, கனகலிங்கம், த.வசந்தராணி, கெ.வரதாம்பிகை, செ.சிவமலர், கு.சுனிதா, செல்வராசா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.10.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

காலையடி,
பண்டத்தரிப்பு.
(66976)
தகவல்:
**ஐ.கெங்காதரன்**
(இளைப்பாறிய ஊழியர், தொலைத்தொடர்புத் திணைக்களம்).

## பாடசாலையின் சிமெந்துத் தரை சேதம்

நவாலி,ஒக்.17

மானிப்பாய் விவேகானந்தா பாடசாலையின் சிமெந்து தரைப்பகுதிகள் உடைந்து சிதைவுற்ற நிலையிலுள்ளன.

இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் நீண்டகாலமாகப் பல சிரமங்களை அனுபவித்து வருவதாகப் பாடசாலை யின் அதிபர் திருமதி சரவணபவன் தெரிவித்தார். (202-100)


## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science 5 Months ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing 4 Months ~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining 4 Months ~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing 4 Months ~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering 3 Months ~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD 3 Months ~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office 3 Months 1,000/= | Accounting Package 3 Months ~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :19/10/2007 2PM
Batch II :20/10/2007 12PM
Batch III :21/10/2007 12PM
Batch IV: 24/10/2007 2PM

October 31ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# தொடரும் மனித உரிமை மீறல்கள்: சர்வதேசத்தின் பதில்தான் என்ன?

இலங்கையில் அரசுப் படைகளின் பின்புலத்தில் அரங்கேறும் மோசமான மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதில் இலங்கை அரசுக்கு நேர்மையான ஈடுபாடுகிடையாது என்பது தொடர்பான அரசின் 'பொட்டுக்கேடு' மீண்டும் ஒரு தடவை அம்பலமாகியிருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அரசினால் அமைக்கப்பட்ட தரப்புகளே இது விடயத்தில் அரசின் உள்ளார்த்தங்களை அம்பலமாக்கும் விவகாரம் மீண்டும் அரங்கேறியிருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் - சுமார் இரண்டு வருட காலத்துக்குள் - இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமான கட்டத்தை எட்டியிருக்கின்றன. இது தொடர்பாகத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பரவலான குற்றச்சாட்டுகளும், கண்டனங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன.

இவற்றைச் சமாளிப்பதற்காக இலங்கை அரசு அவ்வப்போது கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறுவதில்லை.

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல், இவ்விவகாரங்களில் ஈடுபாட்டைக் காட்டும் சர்வதேசப் பிரதிநிதிகளை இலங்கை நிலைமைகளை நேரில் பார்வையிட அழைத்தல் என்று பல்வேறு நாடகங்கள் அவ்வப்போது அரங்கேற்றப்படும். ஆனாலும் களத்தில் நிலைமை மோசமாக இருப்பதால் - மனித உரிமைகளைப் பேணுவதில் அரசு திடசங்கற்பம் பூணாமல், அத்தகைய மனித உரிமை மீறல் போக்குக்கு அரசுத் தலைமையே பின்னணியில் செயற்படுவதால் - இத்தகைய நாடகங்கள் அரசுக்கே அதன் தலையில் மண் அள்ளிக் கொட்டும் அங்கங்களாக நடந்து முடிந்து விடுகின்றன.

மனித உரிமைகள் விவகாரங்களில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு அரசு நியமித்த குழுவின் நான்கு முக்கிய உறுப்பினர்களான மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தமது அந்தப் பொறுப்பிலிருந்து தாங்களாகவே விலகியிருக்கின்றனர் என்று அறிவித்திருக்கின்றமை அரசுக்கு வீழ்ந்த நல்ல 'அடி' யே ஆகும்.

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பதினாறு முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை மஹிந்த ராஜபக்ஷ கடந்த வருடத்தில் நியமித்தார். அத்தகைய ஆணைக்குழுவால் பயன் ஏதும் விளையப் போவதில்லை - உண்மைக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு இக்குழு ஆக்கபூர்வமாக ஏதும் சாதிக்காது - என்று விசனம் தெரிவிக்கப்பட்ட பின்னணியில் - இக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்காக சர்வதேசப் பிரமுகர்கள் அடங்கிய அவதானிகள் குழு ஒன்றையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார்.

எதிர்பார்க்கப்பட்டபடி, மேற்படி ஆணைக்குழு பயனுள்ள நடவடிக்கை எதனையும் இதுவரை எடுக்கவேயில்லை என்பதை சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் குழுவின் தலைவரான இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பி.என்.பகவதி அடுத்தடுத்து மூன்று அறிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தினார். இவ்வாரத்திலும் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில், இவ்விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை என்பதை அவர் மீளவும் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த வாரம் இலங்கைக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்ட மனித உரிமைகளுக்கான ஐ.நா.தூதுவர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரும் இதையே தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகள் பேணும் விவகாரத்தில் அரசின் மனித உரிமைகள் அமைச்சுக்கு ஆலோசனை வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட - பத்துப்பேர் கொண்ட - ஆலோசகர் குழுவிலிருந்து நான்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இப்போது விலகும் சமயத்திலும் அதே நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

''மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதிலோ, மோசமான மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபடுவோரை அக் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கும் நடைமுறையை ஒழிப்பதிலோ அரசு உண்மையான ஈடுபாட்டுடன் செயற்படவில்லை. இவை தொடர்பாக நாம் வழங்கும் ஆலோசனைகளைச் செவிமடுத்துச் செயற்படுத்துவதில் அரசுக்கு ஆர்வம் கிடையாது. - என்ற உண்மைகளையும் அவர்கள் வெளிப்படையாகவே அம்பலப்படுத்தியிருக்கின்றார்கள்.

சர்வதேச ரீதியில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களாக மதிக்கப்படும் சுனில் அபேயசேகரா, நிமல்கா பெர்னாண்டோ, றொஹான் எதிரிசிங்க, பாக்கியசோதி சரவணமுத்து ஆகிய நால்வரே இவ்வாறு தமது ஆலோசகர் பதவிகளைத் துறந்ததன் மூலம் இலங்கையின் உண்மை நிலைவரத்தை வெட்ட வெளிச்சமாக்க உதவியிருக்கின்றார்கள்.

''மேற்படி ஆலோசகர் குழுவில் நாம் அங்கம் வகிப்பது இன்னும் மோசமான நிலையையே - விளைவையே - உருவாக்கியுள்ளது. எம்மை ஆலோசகர் பதவியில் வைத்திருப்பதை, மனித உரிமைகளைப் பேணுவதில் தனக்குள்ள சிரத்தையின் வெளிப்பாடாக அரசு சர்வ தேசத்துக்குக் காட்டி, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறது. அத்தகைய தவறுக்கு நாம் உடந்தையாக முடியாது.'' - என்று ஆலோசகர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தவர்களுள் ஒருவரான பாக்கியசோதி சரவணமுத்து உண்மையைப் போட்டு உடைத்திருக்கின்றார்.

''மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படையினரைக் கட்டுப்படுத்துவதில் அரசு தனது திடசங்கற்பத்தை வெளிப்படுத்தவே இல்லை. இவ்விவகாரத்தில் உள்நாட்டு மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதிலும் அரசுக்கு உறுதிப்பாடான நிலைப்பாடு கிடையாது.'' - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

''தடுப்புக்காவல் கைதிகளின் உரிமைகளைப் பேணுவது சம்பந்தமாக ஜனாதிபதியின் பணிப்புரைகளைக் கூடப் பொலிஸார் பின்பற்றும் நிலைமை இல்லை.'' - என்று ஆலோசகர் பதவியை இராஜினாமாச் செய்த மற்றொருவரான நிமல்கா பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

''மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான நிலைமையை மேம்படுத்துவதில் அரசுக்கு சிரத்தையே இல்லை என்பதை நாம் நன்கு அவதானித்துள்ளோம்.'' - என்றும் நிமல்கா பெர்னாண்டோ அம்மையார் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்த லூயிஸ் ஆர்பர் அம்மையார் வரை சர்வதேசத் தரப்புகள், பிரதிநிதிகள், பிரமுகர்களின் உறுதியான முடிவும் அவதானிப்பும் தீர்மானமும் கூட இதுதான்.

தன்னைச் சட்டரீதியான அரசாகவும் இறைமையுள்ள தேசத்தின் தலைமையாகவும் காட்டும் ஓர் அரசு, இத் தேசத்தில் மனித உரிமைகளைப் பேணுவதில் ஈடுபாடே காட்டாமல் குற்றம் இழைத்து வருவது குறித்து சர்வதேசம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

இந்த மனித உரிமை மீறல் கொடூரங்களினால் அதிகம் பாதிக்கப்பட்டு அதிர்ச்சியில் உறைந்து போய்க் கிடக்கும் - இலங்கைத் தீவின் சிறுபான்மையினரான - தமிழர்கள் சர்வதேசத்திடமிருந்து விடை தேடும் வினா இது!



நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று ஆரம்பமான கைத்தொழில் கண்காட்சியில், டைனோசர் மற்றும் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.
(படங்கள் - லக்ஷ்மன்)

## சத்துருக்கொண்டாவில் பொலிஸ் அலுவலர் காயம்

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை 5.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் குறித்த காவலரண் மீது கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு - போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (சி)

## கைத்தொழில் மேம்பாட்டுக் கண்காட்சி நாவலர் மண்டபத்தில் நேற்று ஆரம்பம்

### பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 17

குடாநாட்டு மக்களின் கைத்தொழில் மேம்பாட்டை எடுத்துக்காட்டும் கைத்தொழில் கண்காட்சி நேற்று ஆரம்பமானது.

யாழ். செயலக கைத்தொழில் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியை அரச அதிபர் கே. கணேஷ் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் திறந்துவைத்தார்.

இக்கண்காட்சி இன்றும் தொடர்ந்து இடம்பெறுகிறது.

கண்காட்சியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், பனை அபிவிருத்திச் சபை, தேசிய உயிர்ப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம், மகளிர் அபிவிருத்தி நிலையம், ஜெயபூர் நிறுவனம், கிராம அபிவிருத்தியாக்கம், கணனி வன்பொருள் பயிற்றுநிலையம், கைப்பணிப் பொருள்கள் கைத்தறி புடைவைகள் நிறுவனங்கள், சிறுவர் கல்விக்கும் பால்நிலைய அபிவிருத்திக்குமான நிறுவனம் உட்பட பல அமைப்புக்களின் உற்பத்திப் பொருள்களும் பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட பலதரப் பட்ட பொருள்களும்கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உட்பட திணைக்கள அதிகாரிகள் பலரும் பெரும் எண்ணிக்கையான மக்களும் நேற்று பார்வையிட்டனர்.

(அ-1-111)

## சகல பொருள்களையும் வாங்கக்கூடிய 'கூட்டுறவு நகர்' நாளை திறக்கப்படுகிறது

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் 'கூட்டுறவு நகர்' வர்த்தகத் தொகுதி நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறக்கப்பட உள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சம்பிரதாய பூர்வமாக பிரஸ்தாப வர்த்தகத் தொகுதியைத் திறந்து வைப்பார்.

சகல பொருள்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்யக்கூடிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த வர்த்தகத் தொகுதி, கே.கே.எஸ். வீதியில் உள்ள சங்கத் தலைமையகத்துடன் இணைந்ததாக இயங்கவுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் கே. நவநீதன் தெரிவித்தார்.

இதே வர்த்தகத் தொகுதி முன்னரும் இயங்கிவந்தது. எனினும் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகாரணமாக மூடப்பட்டது. இப்போது பொருள்கள் கிடைப்பதால் அது புனரமைக்கப்பட்டு, இயங்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த வர்த்தகத் தொகுதியில் சகல விதமான பொருள்களையும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-1-224)

# ஆயுதம் தரித்த குழுக்களின் நடமாட்டம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்த வண்ணமுள்ளது

## கண்காணிப்புக்குழு அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தரித்த குழுக்களின் நடமாட்டம் தொடர்ந்த வண்ணமுள்ளதுடன் கருணா குழுவினரால் ஆள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளும் கண்காணிப்புக் குழுவுக்குக் கிடைத்துள்ளன.

கண்காணிப்புக் குழுவின் ஆகப் பிந்திய வாராந்த அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்புக்கு வடமேற்கில் 12 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விநாயகபுரத்தில் ஒக்ரோபர் 4ஆம் திகதி படைத்தரப்பினர் இரண்டு மனித சடலங்களைக் கண்டெடுத்தனர். கண்கள் கட்டப்பட்டு தலையில் சூட்டுக்காயங்களுடன் இச்சடலங்கள் காணப்பட்டுள்ளன. காத்தான்குடியில் 2ஆம் திகதி ஒருவர் சூட்டுக்காயங்களுக்குள்ளானார்.

### பெண் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பில் வவுணதீவு என்ற இடத்தில் ஆயுதம் தரித்த இனந்தெரியாத குழுவினரால் ஒக்ரோபர் முதலாம் திகதி 26 வயதுடைய பெண் ஒருவர் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை ஆயுதப்படைகள் போன்று உடை தரித்த 9 பேர் இதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநாள் மாவடிவேம்பு என்ற இடத்தில் 15 வயதுச் சிறுவன் ஒருவன் [illegible] [illegible] குழுவினரே இதனைச் செய்ததாகக் கூறப்பட்டது. ஒக்ரோபர் 2ஆம் திகதி இருவர் கடத்தப்பட்டனர் - கருணா குழுவினரே இதில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

### பொலிஸ் உடையில் கடத்தல்காரர்

ஒக்ரோபர் 3ஆம் திகதி திருகோணமலையில் ஒருவர் கடத்தப்பட்டார். அடுத்தநாள் பொலிஸ் உடையில் வந்த 12 நபர்களால் அம்பாறையில் 30 வயது நபர் ஒருவர் கடத்தப்பட்டார். திருகோணமலை, புளியங்குளத்தில் ஒக்ரோபர் 5ஆம் திகதி 44வயதுடைய ஒருவர் கடத்தப்பட்டார். வெள்ளைவானில் வந்த நான்கு நபர்கள் இதனைச் செய்தார்கள் என்று கூறப்பட்டது. 200 மீற்றர் தொலைவிலுள்ள ஆயுதப் படைகளின் முகாம் ஊடாக இவர்கள் கடந்து சென்றதாகவும் கூறப்படுகின்றது. இவர் ஏற்கனவே கருணா குழுவின் பிரதான முகாமில் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

ஒக்ரோபர் 6ஆம்,7ஆம் திகதிகளில் திருகோணமலையிலும் வெல்லாவெளியிலுமாக இருவர் கடத்திச் செல்லப்பட்டனர்.

மேலும் சில கடத்தல்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

### அரசியல் கட்சிகள் செயற்பட முடியாதநிலை

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு சில அரசியல் கட்சிகள் பகிரங்கமாக செயற்பட முடியாமல் இருப்பதாக கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. மட்டக்களப்பில் உள்ளூராட்சித் தேர்தல்கள் விரைவில் நடக்க விருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக விருப்பதாலும் ஆயுதம் தரித்த குழுக்களின் நடமாட்டம் தொடர்ந்து இருப்பதாலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது சாத்தியமாக விருக்கும் என்று கருதப்படவில்லை.

கருணா குழுவினர் ஆயுதங்களுடனும் கடத்தப்படும் ஆள்களுடனும் சோதனைச்சாவடிகளினூடாக சென்று வருவதாகவும், சந்தேகத்துக்கிடமாக நடந்து கொள்ளும் கருணா குழுவின் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸார் தவறிவிடுவதாகவும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக கண்காணிப்புக் குழு பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகள் அனைத்தையும் பதிவு செய்யும்படி பொலிஸ் நிலையங்கள் யாவற்றுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக உயர் மட்டப்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவுக்கு மேலும் ஓர் உறுப்பினர் வந்து சேர்ந்துள்ளார். அவர் கொழும்பிலிருந்து பணியாற்றுவார். (ப)

## நாளை

ஐப்பசி - 01 : வியாழக்கிழமை
18.10.2007

| | |
|---|---|
| திதி : சப்தமி | முன்னிரவு 09.23 |
| நட்சத்திரம் : | பூராடம் பின்னிரவு 01.21 |
| சுபநேரம் | : 07.32 - 09.02 |
| ராகுகாலம் | : 01.32 - 03.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு அபிவிருத்தி குறித்து மட்டு. செயலகத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் அதிகாரிகள் பங்கேற்பு

மட்டக்களப்பு, ஒக். 17

கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான டியூ குணசேகர, பந்துல குணவர்த்தன, பீ. தஸாரத்ன, பஷீர் சேகுதாவூத், அமீர் அலி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த செங்கலடி, கிரான் ஆகிய பகுதி மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும் ஏற்கனவே குடியமர்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், இடம்பெயர்ந்த மற்றும் மீளக் குடியேறிய மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக - அரச அதிகாரிகள் அமைச்சர்களுக்கு விளக்கிக் கூறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# படையினரின் சடலங்களை ஏற்றிவரச்சென்ற உழவு இயந்திரம் அமுக்கவெடியில் சிக்கியது!

கொழும்பு, ஒக். 17

யால சரணாலயப் பகுதியில், பாணம தல்கஸ்மங்கடப் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சடலங்களையும் ஏற்றிவருவதற்காகச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் அமுக்க வெடியில் சிக்கியது. நேற்றுக்காலை நடந்த இந்தச் சம்பவத்தில் மற்றொரு படைச் சிப் பாய் உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த படையினர் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இராணுவ முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்திருந்தமையும் சம்பவத்தில் ஆறு படையினர் உயிரிழந்தமையும் தெரிந்தவையே.

இதேவேளை, அங்கு பெருமளவு படை யினர் குவிக்கப்பட்டு விசேட தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# பெண்களுக்கு தொலைபேசித் தொந்தரவு: இளைஞருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.17

பெண்களுக்கு தொலைபேசி மூலம் தொந்தரவு கொடுத்துவந்ததாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

வைத்தியர் ஒருவரின் மனைவிக்கு தொலை பேசி மூலம் தொந்தரவு கொடுத்து வந்ததாக கைது செய்யபட்ட இளைஞன் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் மீண்டும் நேற்று யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர்செய்யப்பட்டார்.

பிரஸ்தாப இளைஞன் மற்றெரு பெண்ணுக்கும்தொலைபேசி தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் என்று பொலிஸார் மற்றொரு வழக்கை நேற்று தாக்கல் செய்தனர்.

கொக்குவிலை சேந்த சித்தமருத்துவத் துறை மாணவரான சந்தேக நபரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# முள்ளிக்குளத்தில் சண்டை

கொழும்பு,ஒக்.17

வவுனியா, முள்ளிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகளுக் கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல் ஒன்றில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் 7 படையினர் காயமடைந்தனர் என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

சில மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்த மோதலின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப் புலி உறுப்பினர்களின் 7 சடலங்கள் மற்றும் ரி - 56 ரகத் துப்பாக்கிகள் - 06, எம்.பி.எம். ஜி. ரகத் துப்பாக்கி - 01 ஆகியவை மீட்கப்பட்டன என்றும் படைத்தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## உயிர் அச்சுறுத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதற்கான பணிகளை யாழ். செயலகம் நேற்று ஆரம்பித்துள்ளது.

யாழ். நீதிமன்றம் அமைந்துள்ள 4ஆம் குறுக்கு வீதியில் உள்ள கட்டடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை அமைக்க ஏற் கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அக்கட்டடத்தின் உரிமையாளர் கட்டடத்தை மீள ஒப்படைக்குமாறு கோரியுள்ளதை தொடர்ந்தே மேல் நீதிமன்றம் இயங்கியகட்டடத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ-1)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பிரிட்டிஷ் விமானத்தின் இறக்கைப் பகுதி விபத்தையடுத்து தீப்பிடித்துக் கொண்டது. மற்றைய விமானத்திற்கும் சேதம் விளைந் தது. எனினும் பயணிகள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பயணிகள் பதற்றமடைந்தனர். விமானங்கள் பத்திரமாகத் தரையிறக்கப்பட்டன." - என விமான நிலைய உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

விபத்து நேர்ந்த சமயத்தில் 'ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்' விமானத்தில் இருந்த 286 பயணிகள், 11 ஊழியர்கள் என மொத்த மாக 297 பேரும் விமானத்தளத்திற்குஅருகிலிருக்கும் ஹோட்டலில் தங்கியிருந்த நிலையில் அவர்கள் இன்று காலை கொழும்பு திரும்புவர் என எதிர்பார்க்கப்பட்டது. (சி)


பாராட்டி வாழ்த்துகிறோம்



2007 ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்

161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

கொழும்பு பம்பலப்பிட்டி இந்து மகளிர் கல்லூரி

மாணவி

செல்வி நிர்மலன் தரங்கிணி

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு கல்வித் துறையில் மென்மேலும்பல உயர்வுகள் பெற்று வளமுடன் வாழ வேண்டுமென்று புத்தூர் மணற்பகுதி புவனேஸ்வரி அம்மனை வேண்டுகின்றோம்.

"ஸ்ரீ ரஞ்சனி"
மணற்பகுதி
புத்தூர்

வாழ்த்துவோர்
வே.இளையகுட்டி (அப்பப்பா) குடும்பம்
சி.அசோகன் (மாமா) குடும்பம்
இ. சாரங்கன் (சித்தப்பா) குடும்பம்


# குடாக்கடலில் தொழில் செய்ய இன்னும் அனுமதியில்லை

குருநகர்,ஒக்.17

யாழ். குடாக் கடலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கடற்சண்டையைத் தொடர்ந்து அடுத்த நாள் 14 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை குருநகர் இறங்குதுறை தொடக்கம் குடாக்கடலின் கிழக்கு கடற்பகுதிவரையிலான பிரதேசத்தில் மீன் பிடிக்க மீனவர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை என்று குருநகர், பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்தன.

அன்று நடைபெற்ற மோதலின் போது தமது கடல் அனுமதிப் பத்திரங்களை இழந்து கரைதிரும்பி படையினரால் கைது செய்யபட்டு விடுவிக்கப்பட்டு, மறுநாள் அடைக்கல மாதா படைமுகாமிற்கு வருகை தருமாறு கோரி படைமுகாமுக்கு சென்ற 40 குருநகர் மீனவர்களது கடல் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாகவும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை என்றும் மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கடந்த மூன்று தினங்களாக இத்துறைகளில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள மீன்பிடிக்கலங்கள் மற்றும் கடல் உபகரணத்தின் நிலைபரத்தையும் அறிய முடியாமல் உள்ளதாகவும் கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-51)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை இந்தத் தாக்குதலில் அந்தப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான் - ஒரு நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றும் அதி காரம் இந்த நீதிமன்றத்துக்கு இல்லை.

அந்த அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து அதன் முடிவைப் பெற்றுக்கொள்ளவும் - என்று பிரஸ்தாப பெண்ணுக்கு அறிவிக்கும்படி பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

மேல் முறையீட்டு நீதிமன்ற அறிவுறுத்தல் கிடைத்த பின்னர் அது குறித்து அறிவிக்கப்படும் போது நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கும், கடற்படையினர் நலனுக்காக ஆஜராகும் சட்டத்தரணிக்கும் நீதிவான் தெரிவித்தார். (அ-1)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்குக் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து நீதிபதியின் உத்தரவின் பேரில் நெல்லியடிப் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### ஒருவர் பெண்

இதன் மூலம் மன்னாரில் வைத்துப் பெண் ஒருவரும், ஆண் ஒருவருமாக இருவரும், வடமராட்சியில் வைத்து ஆண் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். எனவே பொதுமக்கள், கல்விமான்கள், சமூகப் பொறுப்புடையவர்கள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாகச் செயலில் இறங்கி பொலிஸ் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ முறைப்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் இந்தக் கொள்ளைக் கூட்டத் தைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த முடியும்.

சட்டத்தரணி ஒருவரும், பொதுமகன் ஒரு வரும் கொடுத்த துணிச்சலான தகவலை யடுத்தே இந்த கப்பம் பெறும் நடவடிக்கை யில் ஈடுபட்டார்கள் எனக் கூறப்படும் மூவரையும் கைது செய்யமுடிந்தது. மன்னாரில் வைத்து ஆண் ஒருவரும் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

### ரூ. 25 லட்சம் முடக்கம்

அத்துடன் மன்னாரில் உள்ள இரு வங் கிகளில் அவர்கள் வைத்திருக்கும் வங்கிக் கணக்குகளுக்கு வடமராட்சியில் உள்ள பொது மக்கள், வர்த்தகர்கள் ஆகியோரால் வங்கிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட 25 லட்சம் ரூபா பணத்தையும் முடக்கி வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கப்பம் பெறும் நடவடிக்கைக்கு அவர்கள் பயன்படுத்தி வந்த கையடக்கத் தொலை பேசி, கேபில் தொலைபேசி இலக்கங்களும் இணங்காணப்பட்டுள்ளன. மற்றுமொருவர் வடமராட்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். களவாடப்பட்ட ஒரு தொகை நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

### பொலிஸாருக்கு நன்றி

நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட துரித செயற்பாடுகளின் மூலமே இவற்றைக் கண்டுபிடிக்கமுடிந்தது. இதற்காக அவர்களுக்கு பொதுமக்கள் சார்பிலும் என்சார்பிலும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

### அனுராதபுரம், யாழ். சிறைச்சாலைகளில்

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் அனு ராதபுரம் சிறைச்சாலையிலும், ஒருவர் யாழ். சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றமும், பொலிஸாரும் மேற்கொண்ட உடனடி நடவடிக்கை காரணமாகத் தற்போது வடமராட்சியில் கொள்ளைச் சம்பவங்களும் அச்சுறுத் தல்களும் குறைவடைந்துள்ளன. கொள்ளை யிடப்பட்ட பொருள்களில் பெரும்பாலானவை மீட்கப்பட்டுள்ளன. மேலும் கொள்ளையர் களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே இதற்கு பொதுமக்களிடம் இருந் தும் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்தும் தக வல்களையும், ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கிறோம் - என்றார் நீதிபதி. (அ-50-155)

## பஸிலுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்களை இணங்க வைத்து தமது சகோதரரைப் பிரதமராக்கும் முயற்சிக்கு புத்துயிர் அளிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை- வரவு - செலவுத் திட் டத்திற்கு முன்னர் பஸில் தேச நிர்மாண அமைச் சராகும் வாய்ப்புகள் உள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேச நிர்மாண அமைச்சு தற்போது ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் மறை வால் ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்திற்கு பஸில் ராஜபக்ஷ அவசர அவசரமாக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பஸிலைப் பிரதமராக்கும் முயற் சியை ஜனாதிபதி மேற்கொண்டார். தற் போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக் கவை இராஜினாமாச் செய்யவைத்து அந்த இடத்திற்கு பஸிலை பிரதமராக்க ஜனாதிபதி எடுத்த முயற்சிக்கு தற்போது அரசிற்குள் ளேயே எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. (சி)


தேவை-நேரில் வரவும்

★ இரவு மேற்பார்வையாளர்கள்

முன்னனுபவம் உள்ளவர்கள் அதற்கான சான்றாதாரங்களுடனும், அண்மையில்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடனும் அலுவலக நேரத்தில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி)
உதயன் வெளியீட்டகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org